பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 23 | புதன்கிழமை | 05.06.2024 | அதிர்வு 309

## கூட்டணி துணையுடன் மாத்திரமே பா.ஜ.க. ஆட்சி அமைக்க வாய்ப்பு

09



# மோடியின் வெற்றிக்கு ரணில் வாழ்த்து!




இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் வெற்றிக்கு இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

“பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் முன்னேற்றம் மற்றும் செழிப்பு ஆகியவற்றில் இந்திய மக்களின் நம்பிக்கையை வெளிப்படுத்தும் வகையில், பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. வெற்றி பெற்றதற்கு எனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்” – என்று தனது ருவிட்டரில் ரணில் பதிவிட்டுள்ளார். 06

# மின் சட்டமூலம் அரசமைப்புக்கு முரணானது!

### உயர் நீதிமன்றம் அறிவிப்பு




நாடாளுமன்றத்தில் நாளை வியாழக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள இலங்கை மின்சார சட்டமூலம், நியாயமான அடிப்படை உரிமையை மீறும் வகையில் உள்ளதால், 06

# பொது வேட்பாளர் கோரிக்கை வெற்றி பெற முழுமூச்சுடன் செயற்படுமாம் புளொட் கட்சி

### மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(எஸ்.நிதர்ஷன்)

**ஜனாதிபதித் தேர்தலுக்கான தமிழ்ப் பொது வேட்பாளர் கோரிக்கை வெற்றி பெற ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்) முழுமூச்சுடன் செயற்படும் என்று அக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.** 06



# மோடியின் வெற்றியை யாழ். நகரில் கொண்டாடிய சிவசேனை அமைப்பு






(எஸ்.நிதர்ஷன்)

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க. வெற்றி பெற்றதன் மகிழ்ச்சியை வெளிப்படுத்து முகமாக இலங்கை சிவசேனை அமைப்பு மற்றும் இலங்கை உருத்திரசேனை அமைப்பின் ஏற்பாட்டில் வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வு 06

# மண்மேடு சரிந்து வீழ்ந்து 3 வயது குழந்தை மரணம்

### கேகாலையில் துயரம்



கேகாலைபிரதேசத்தில்மண்மேடு சரிந்து வீழ்ந்து மூன்று வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

குழந்தையின் வீட்டின் பின்புறம்பாதுகாப்புச்சுவர்கட்டுவதற்காகநேற்றுக்காலைவாய்க்கால் ஒன்று வெட்டப்பட்டுள்ளது.

மேற்படி குழந்தை அந்த வாய்க்காலுக்கு 06




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நரித் தந்திர அரசியல் விவகாரம் ஒன்று குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பிரிஸ் இப்போது புட்டுப்புட்டு வைத்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளை – 62 வீதமான வாக்காளர்களின் ஆதரவை – பெற்ற ஜனாதிபதி கூட தாம் பதவியிலிருந்த போது அனுபவித்த – பிரயோகித்த – அதிகாரங்களை விட அவரின் எஞ்சிய பதவிக் காலத்துக்குச் செயற்பட வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகமான அதிகாரங்களை 06

# சீரற்ற காலநிலையால் 26 பேர் உயிரிழப்பு; பிரமித்த பண்டார தென்னக்கோன் தகவல்



"சீரற்ற காலநிலையால் 26 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், மீள் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கவும் ஜனாதிபதி நிதி ஒதுக்கியுள்ளார்."

– இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் உரையாற்றுகையில் –

"நாட்டில் கடந்த தினங்களில் நிலவிய சீரற்ற காலநிலையால் இதுவரை (நேற்று திங்கட்கிழமை) 23 மாவட்டங்களில் உள்ள 33 ஆயிரத்து 622 குடும்பங்களை சேர்ந்த 130,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட திடீர் விபத்துக்களினால் 26 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 41 பேர் காயமடைந்துள்ளனர்.

மண்சரிவு மற்றும் வெள்ள அபாயத்தை கருத்திற் கொண்டு 116 தற்காலிக பாதுகாப்பு மத்திய முகாம்களில் 2,369 குடும்பங்களைச் சேர்ந்த 9248 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான வசதிகள் பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இயற்கை அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை தொடர்பில் கடந்த வாரம் திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

அனர்த்தங்கள் தொடர்பில் அறியத் தருமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் 117 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரதேச செயலக பிரிவுகள் முன்வைக்கும் யோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பது தற்போது வழமையாகி விட்டது. மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையின் போது மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு போதுமான நிவாரணம் வழங்க ஜனாதிபதி நிதி ஒதுக்கியுள்ளார்."– என்றார்.

# ஐ.நா. பிரதிநிதி நேற்று மன்னார் விஜயம் மனித புதை குழியையும் பார்வையிட்டார்



(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் என்ட்ரோ பிரெஞ்ச் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மன்னாருக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இங்கு பல்வேறு சந்திப்புக்களை முன்னெடுத்தார்.

நேற்று மதியம் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் விசேட சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது. இதன் போது மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும் சந்தித்து அவர் கலந்துரையாடியுள்ளார்.

மேலும் மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரையும் சந்தித்து மன்னார் மாவட்டத்தின் மனித உரிமைகள் நிலைப்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடினர்.

அதனைத் தொடர்ந்து மன்னார் நகரப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி யையும் அவர் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

இதன் போது ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதி நிதி உள்ளிட்ட குழுவினருடன் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய பிரதிநிதிகள், மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா, மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களான சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் மற்றும் ரனித்தா ஞானராஜ் ஆகியோரும் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நெடுங்கேணியில் வீட்டிற்குள் புகுந்த பொலிஸாரின் வாகனம்

## மயிரிழையில் தப்பிய மாணவர்கள்

**(வவுனியா நிருபர்)**

வவுனியா, நெடுங்கேணி பகுதியில் நேற்று மாலை சாரதியின் கட்டுப்பாட்டையிழந்த புளியங்குளம் பொலிஸாரின் ஜீப் வீடு ஒன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நெடுங்கேணி – புளியங்குளம் வீதியில் பயணித்த புளியங்குளம் பொலிஸ் நிலைய ஜீப், சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியோரத்தில் இருந்த வீடு ஒன்றுக்குள் புகுந்துள்ளது.


வீட்டு வேலியை உடைத்துக் கொண்டு சென்ற ஜீப் வண்டி வீட்டிற்குள் நின்ற மோட்டர் சைக்கிள், வீதியோர மின்சாரத் தூண், வீட்டு குடிநீர் இணைப்பு என்பவற்றை சேதப்படுத்தியுள்ளது. அருகில் உள்ள கொட்டகையில் படித்துக் கொண்டிருந்த சுமார் 40 வரையான மாணவர்கள் மயிரிழையில் தப்பியுள்ளனர்.

விபத்தின் போது புளியங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உட்பட 5 பேர் சிவில் உடையில் வாகனத்தில் இருந்தனர் என விபத்து இடம்பெற்ற பகுதியில் இருந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் பொதுமக்கள் குவிந்ததும் பொலிஸார் அங்கிருந்து நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்குள் தப்பிச் சென்றுள்ளனர். நெடுங்கேணி பொலிஸா சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், ஜீப்பை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். விசேட அதிரடிப்படையினரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சம்பந்தப்பட்ட பொலிஸார் மதுபோதையில் வாகனத்தை செலுத்தியமையே விபத்துக்கு காரணமாக இருக்கலாம் என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.





# கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் போதைப்பொருள் விற்பனை; 2 பேர் கைது

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளைஞர்களுக்குப் போதைப்பொருள் விற்பனை செய்த குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் கட்டுநாயக்க பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இனிப்பு பண்டங்களை விற்பனை செய்யும் போர்வையில் கேரள கஞ்சா போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாகப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரிடத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் இவருக்குப் போதைப்பொருள் வழங்கியவர் எனக் கூறப்படும் மதுரங்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய சந்தேக நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்



எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசாரணையில் சந்தேக நபர்களிடமிருந்து 750 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

# ஹெரோயின் போதைப் பொருளுடன் வவுனியாவில் 24 வயது யுவதி கைது!





**(கே.வசந்தன்)**

வவுனியாவில் 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 24 வயது யுவதி ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய போதை ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி றிஸ்வி தலைமையிலான பொலிஸார் வவுனியா, தோணிக்கல் பகுதியில் மேற்கொண்ட விசேட நடவடிக்கையின் போது விற்பனைக்காகத் தயார்படுத்தி வைக்கப்பட்டிருந்த 5 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டனர்.

இதன்போது அந்த ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த யுவதியும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட யுவதியை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# மஹிந்தானந்த அளுத்கமகே எனது தந்தையைத் தாக்கினார் குணதிலக்க ராஜபக்ஷவின் புதல்வர் பொலிஸில் முறைப்பாடு



முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மேற்கொண்ட தாக்குதலால் தமது தந்தையின் பாதம் உடைந்தது என தெரிவித்து, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவின் மகன், கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது குறித்து வாக்குமூலம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பில் தாம் நேற்று கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தோம் என நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷவின் மகன் நிலுபுல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது தந்தைக்கு இராணுவ வைத்தியசாலையில் காலை 7 மணி முதல் முற்பகல் 11 மணி வரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது எனவும் பின்னர் அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தையடுத்து மஹிந்தானந்த அளுத்கமகேவினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக நிலுபுல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தாக்குதலைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் குணதிலக்க ராஜபக்ஷ இராணுவ வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

# சட்டவிரோத கட்டுமானங்களை அகற்ற அமைச்சரவை அனுமதி

கொலன்னாவை பிரதேச செயலக பிரிவில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு காரணமாகவுள்ள சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அத்துடன், காணிகளை நிரப்பும் நடவடிக்கைகளை நிறுத்துதல், பிரதேசத்தில் வடிகாலமைப்பு தொகுதியை தூய்மையாக்குதல் உள்ளிட்ட ஏனைய அனைத்து படிமுறைகளையும் மேற்கொள்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பலத்த மழைவீழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட கொலன்னாவை பகுதிக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதேச மக்கள் முன்வைத்த விடயங்களை கருத்திற்கொண்டு அமைச்சரவை பத்திரங்களை சமர்ப்பித்தார்.

இந்த பிரதேசத்தில் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு மூல காரணங்களை அடையாளங்கண்டு எதிர்வரும் காலங்களில் அவ்வாறான நிலைமைகள் மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை முன்மொழியவும், எல்லைப்பகுதிக்குள் காணப்படும் காணிகளை அதிகபட்சம் பயனுள்ள வகையில் பயன்படுத்தி கொலன்னாவை நகரத்தை மீண்டும் திட்டமிடுவதற்காக விரிவான அபிவிருத்தி திட்டத்தை தயாரிப்பதற்கு குழுவொன்றை நியமிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.



# பொருளாதார நெருக்கடியை முடிவுக்கு கொண்டு வந்து ஜனாதிபதி ரணில் பொருளாதாரத்தை பலப்படுத்துவார்

## இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கூறுகின்றார்



"பொருளாதாரப் பிரச்சினைகளை நிறைவு செய்து, நாட்டை சரியான பாதையில் வழிநடத்தக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே. எனவே, மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டு எதிர்காலத்தில் வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவார் என்ற நம்பிக்கை உள்ளது."

– இவ்வாறு கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"கிராமியப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் ஒதுக்கிய நிதியில் இருந்து சுமார் 12 பில்லியன் ரூபா நிதியைப் பயன்படுத்தி, கிராமிய வீதிகளையும், பாலங்களையும் அமைக்கின்ற வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பித்திருக்கின்றோம். எமது அமைச்சின் ஊடாக சுமார் 65 சதவீதமான பணிகளை ஆரம்பிக்கக் கூடியதாக இருந்திருக்கின்றது. எதிர்வரும் நாள்களில் இப்பணிகளை முழுமையாக நிறைவு செய்து கிராமங்களுக்கு அவற்றின் பலனைக்கொண்டு சேர்ப்பதற்கு அவசியமான விடயங்களை அமுல்படுத்தி வருகிறோம்.

கடந்த வருடங்களில் கட்டுமானத்துறை வீழ்ச்சியடைந்திருந்தது. கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு மற்றும் கட்டுமானத் துறையில் ஈடுபட்ட சாதாரண தொழிலாளர்களுக்கும் சிக்கல்களை எதிர்கொண்டனர். ஆனால் தற்போது நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைவதோடு மக்களின் வருமானத்தையும் உயர்த்தி, கட்டுமானத்துறையை அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்பும் கிடைத்துள்ளது. எனவே இவ்வாறு நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவிக்கிறேன். இதன் ஊடாக கிராமியப் பொருளாதாரமும் எதிர்காலத்தில் வளர்ச்சியடையும்.

மேலும், தற்போது நாட்டின் அதிகமான பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கிராமிய வீதிகள் சேதமடைந்துள்ளன. எனவே வெள்ளத்தால் சேதமைடைந்த வீதிகளை துரிதமாக புனரமைக்க ஜனாதிபதி சுமார் 03 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுத்துள்ளார். அந்த வகையில் கிராமப்புற மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான பணிகளை நாம் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றோம்.

முக்கியமாக இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. எதிர்காலத்திலும் மக்களின் நம்பிக்கையை வென்று, இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த வேண்டும்.

மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு கடந்த கால பொருளாதார நெருக்கடியினால் இடைநடுவே கைவிடப்பட்டிருந்த அபிவிருத்திப் பணிகளை நிறைவுசெய்து மக்கள் பாவனைக்கு கையளிப்பதற்கான செயற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேபோன்று உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் தற்போதும் நடைபெற்று வருகின்றன.

அதிகமான விபத்துகள் இடம்பெறும் வீதிகள் மற்றும் பாலங்கள் ஆகியவற்றின் பணிகள் கடன் மறுசீரமைப்பு நிறைவடைந்த பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளன.

தற்போது நாட்டின் நல்ல நிலைமை குறித்து மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாட்டை முன்னோக்கிக்கொண்டு செல்ல வேண்டுமென்றால், தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளைத் தாண்டி உறுதியாக எல்லோரையும் அரவணைத்து செயற்பட வேண்டும். அதேபோன்று இப்போது இருக்கின்ற உலகளாவிய பிரச்சினைகளோடு சரியான இடத்திற்கு நாட்டைக் கொண்டு செல்லக் கூடிய ஒரு தலைவராக நாங்கள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைப் பார்க்கிறோம். எனவே அவர் மக்கள் ஆதரவுடன் மீண்டும் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் பலமான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்குவார்.

முக்கியமாக, நான் ஒரு சிறுபான்மை மக்களின் பிரதிநிதி என்ற வகையில் நானும் நம்புகிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் எமது பிரச்சினைகள் குறித்து சிறப்பான சில முன்னெடுப்புகளைச் செய்துகொண்டு வருகின்றார். மேலும், நம்பிக்கைக் கொள்ளக்கூடிய அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள மாகாண சபை முறையை நாங்கள் பலமாகக் கட்டமைக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறிவருகின்றார். இவற்றை அடுத்த வருடம் அமுலாக்கக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்." – என்றார்

# வடக்கு சுகாதார செயலாளராக அருள்ராஜ் நேற்று பதவியேற்பு

(ந.லோகதயாளன்)



வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸினால் ஜே.எஸ். அருள்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு மாகாண நிர்வாகத்தில் நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பற்றாக்குறையினால்

சுகாதார அமைச்சிற்கு நிரந்தர செயலாளர் இன்றி பதில் செயலாளரினால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் வடக்கு மாகாண சபைக்கு நிர்வாக சேவை விசேட தரத்தைச் சேர்ந்த மூவர் அண்மையில் புதிதாக வருகை தந்தனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களில் ஒருவரான ஜே.எஸ். அருளராஜ் நேற்றைய தினம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார மாற்ற சட்டமூலத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனு தாக்கல்



அரசாங்கத்தினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார மாற்ற சட்டமூலம் மற்றும் பொது நிதி முகாமைத்துவ சட்டமூலம் என்பவற்றின் சில சரத்துக்கள் அரசமைப்பிற்கு முரணானவை என உத்தரவிடக்கோரி உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சர்வ மக்கள் சக்தி என்ற அமைப்பினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரதிவாதியாக சட்டமா அதிபர் பெயரிடப்பட்டுள்ளார்.

இந்த உத்தேச சட்டமூலங்களின் ஊடாக நாடாளுமன்றத்தின் நிதி அதிகாரம் ஜனாதிபதியின் கீழ் கொண்டு வரப்படும் என அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அனுபவிக்கின்றார் என்று சுட்டிக் காட்டுகின்றார் பேராசிரியர்.

நிறைவேற்றதிகாரம் மூலம் தாம் கொண்டிருக்கும் அதிகாரங்களை விட, கடந்த ஐந்தாறு வருடங்களாக மாகாண சபைகளுக்குத் தேர்தல் நடத்தப்படாத மையால் அவற்றின் அதிகாரங்களையும், இப்போது ஒன்றரை வருடமாக உள்ளூராட்சித் தேர்தல்களை திட்டமிட்டு நடத்த விடாமல் தடுத்ததன் மூலம் அந்த அதிகாரங்களையும் அவர் கைப்பற்றி வைத்துத் தம் வசம் பேணிப் பிரயோகித்துக் கொண்டிருக்கிறார். உள்ளூராட்சி தேர்தலுக்கான நிதியை விடுவிக்கும்படி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டும் அதை உதாசீனப்படுத்தி, தேர்தலை நடத்த விடாமல் செய்து கொண்டு, உள்ளூராட்சி மன்ற நிர்வாகங்களையும் தமது வழிகாட்டல்களின் கீழ் கொண்டு வந்துள்ளார் அவர்.

இப்போது பொருளாதார மாற்றங்களுக்கான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அதன் மூலம் தற்போது பல்வேறு அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றின் கீழ் இயங்கும் பல முக்கிய பொருளாதார நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புகளையும் நேரடியாக ஜனாதிபதியான தமது கட்டுப்பாட்டின் கீழ் மாற்றுவதற்கு அவர் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று பேராசிரியர் பீரிஸ் எச்சரிக்கின்றார்.

தோலிருக்க சுளை விழுங்கக் கூடிய அரசியல் நரித் தந்திரசாலி ரணில். அவர் இதுவும் செய்வார், இன்னமும் செய்வார். சட்டவாக்கல் துறையினர் எல்லோரும் அவரது இந்த நகர்வு குறித்து 'அலேர்ட்' ஆக இருப்பது நல்லது.

## மோடியின் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் நகரிலுள்ள வைரவர் ஆலய முன்றலில் நேற்று நடைபெற்றது.

கற்பூரம் கொளுத்தப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று சிதறு தேங்காய்கள் உடைக்கப்பட்டன.

அதன்பின்னர்பொதுமக்களுக்குமோதகம், லட்டு பரிமாறப்பட்டு மகிழ்ச்சியை அவர்கள் வெளிப்படுத்தினர். பட்டாசு கொளுத்தியும் வெற்றியை அவர்கள் கொண்டாடினர்.

## மண்மேடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அருகில் சென்றபோது அதற்கு மேல் இருந்த மண்மேடு குழந்தை மீது சரிந்து வீழ்ந்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

குழந்தையின் மீது வீழ்ந்த மண்ணை அகற்றி உடனடியாகக் கேகாலை போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போதும் குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பொது வேட்பாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"நேற்று ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தனின் தலைமையில் நடைபெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தமிழ்ப் பொது வேட்பாளர் சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்" - என்ற தலைப்பில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ம.பத்மநாதன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளையும், சமூக வாழ்வின் எதிர்பார்ப்புகளையும், நாளாந்தம் முகம் கொடுத்து வரும் நெருக்கடிகளையும், தென்னிலங்கை அரசியல் சமூகத்தின் தொடர்ச்சியான ஏமாற்றுத்தனங்களையும் உறுதியாக வெளிப்படுத்தக் கூடிய வகையில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான தீர்மானத்தை ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாம் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏனைய அங்கத்துவக் கட்சிகளுடன் இணைந்து ஏற்றுக்கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கான முழு ஆதரவையும் வெளிப்படுத்தியிருந்தோம்.

அதேநேரத்தில், இந்தத் தீர்மானத்தை ஒரு சில அரசியல் கட்சிகளினதும், ஒரு சில சமூக செயற்பாட்டுக் குழுக்களினதும் தீர்மானமாகவன்றி, தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் அனைத்துத் தரப்பினரதும் ஏகோபித்த கோரிக்கையாக முன்னெடுப்பதன் மூலம், தமிழ் மக்களின் அபிலாஷைகளை - தீர்மானங்களை மிகவும் காத்திரமான முறையில் வலுமிக்கதான முன்னெடுக்க முடியும் என்பதையும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றோம்.

தமிழ்ப் பொது வேட்பாளர் கோரிக்கை பேசுபொருளாக ஆரம்பித்த காலத்தை விட இன்றைய காலகட்டத்தில், பல்வேறு தரப்பினரது அயராத முயற்சிகளால், அக் கோரிக்கையின் ஆதரவுத் தளம் அதிகரித்து வருவதோடு கோரிக்கையின் நியாயத்தன்மையும் பரந்த அளவில் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலைமை மேலும் சிறப்புறவும், தென்னிலங்கையிலும் சர்வதேசத்திலும் அக் கோரிக்கையில் உள்ள நியாயங்களை விஞ்ஞானபூர்வமாக உறுதிப்படுத்தவும், இயன்றளவில் மிகப் பெரும்பான்மையான தமிழ்த் தேசியச் செயற்பாட்டு சக்திகளுடன் இணைந்து முன்கொண்டு செயற்படுவது, தமிழ் மக்களின் எதிர்காலத்துக்கு அவசியமானது என்பதை எமது கட்சியின் மத்திய குழுவின் உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக்கொண்டதோடு அதனை முன்கொண்டு செல்வதற்கும், அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது." - என்றுள்ளது.

## மோடியின் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

"நெருங்கிய அண்டை நாடாக, இந்தியாவுடனான கூட்டுறவை மேலும் வலுப்படுத்த இலங்கை எதிர்பார்க்கின்றது." - என்றும் ரணில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## மின் சட்டமூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசமைப்புக்கு ஏற்ற வகையில் நிறைவேற்றப்பட வேண்டுமாயின், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம் என்று உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

உயர் நீதிமன்றம் பரிந்துரைத்த திருத்தங்களை நிறைவேற்றினால், தனிப்பெரும்பான்மையுடன் குறித்த வரைபை நிறைவேற்றுவதில் எவ்விதத் தடையும் இருக்காது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடாளுமன்றத்தில் நேற்று அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நாளை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள குறித்த சட்டமூலத்தின் மூலம் மின்சார சபையைப் பிரித்து நிறுவப்படும் நிறுவனங்களைத் தனியார் நிறுவனங்களாகக் கொண்டு நடத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளுக்கு அமைய, அதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதுடன், 51 சதவீதம் அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் திறைசேரியின் செயலாளர் வசம் இருக்க வேண்டும்.

இலங்கைமின்சாரசபையின்உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், வர்த்தகம், வழங்கல் மற்றும் கொள்வனவு போன்றவற்றைப் பிரிவுகளாக வகுத்து, அவற்றை நிறுவனங்களாக மாற்றுவதற்கான சட்ட மாற்றங்கள் இலங்கை மின்சார சட்டமூலத்தில் முன்மொழியப்பட்டிருந்தது.

இது தொடர்பான மனுக்களைப் பரிசீலித்த உயர் நீதிமன்றம், அரசமைப்பின் 12/ 01 சரத்துக்கமைய குறித்த வரைபு அரசமைப்புக்கு முரணானது என்று தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை மின்சார சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை என்றும் உயர் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

# நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பொறுப்பேற்றேன்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு











"மற்றைய தலைவர்கள் ஓடுவதற்கு சப்பாத்து தேடிக்கொண்டிருந்த வேளையில் நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பொறுப்பேற்றுக்கொண்டேன். அரசியலை ஒதுக்கிவிட்டு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்திற்கு ஆதரவளிப்பது அனைவரினதும் பொறுப்பாகும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவின் ருவன்வெல்ல இல்லத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின்னர் ஜனாதிபதி இந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். பெருந்திரளான பிரதேச மக்களும் இதில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுக் கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு திரும்பும் வழியில் பாதையின் இருமருங்கிலும் கூடியிருந்தவர்களோடு மக்களுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இதேவேளை, ருவன்வெல்லவிலுள்ள தனது கொள்ளுப்பாட்டியின் வளவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தமையோடு அங்கு சிறிது நேரத்தை கழித்தார்.

முன்னதாக பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில் –

"வங்குரோத்து அடைந்துவிட்டதாக அறிவித்திருக்கும் அரசாங்கத்தினால் மக்களுக்கு எவ்வாறு இந்தளவு சலுகைகளை வழங்க முடியும் என சிலர் கேள்வி எழுப்புகின்றனர். உறுமய, அஸ்வெசும, அரிசி மானியம் வழங்கும் திட்டங்கள் நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலையில் இருந்தபோது ஏன் செயற்படுத்தப்படவில்லை என்றும் கேட்கிறார்கள்.

அதேபோல், அரச ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பள உயர்வு வழங்கினோம். 2015 இற்குப் பிறகு இவ்வாறான சம்பள உயர்வு வழங்கப்பட்ட இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். எனவே, இந்த நிவாரணங்களை அரசாங்கம் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்போகிறது என்ற கேள்வி காணப்பட்டது.

மிகவும் கடினமான சூழ்நிலையில் இருந்த ஒரு நாட்டை நாங்கள் பொறுப்பேற்றோம். ஏனைய தலைவர்கள் ஓடுவதற்கு சப்பாத்து தேடிக்கொண்டிருந்த வேளையில், நான் செருப்புக் காலோடு சென்று ஆட்சியைப் பொறுப்பேற்றேன். அது மட்டுமன்றி, சரியான கொள்கையின்படி செயற்பட்டோம். அதனால் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக சமூகத்தின் நம்பிக்கையை வென்றெடுத்தோம். இரண்டு வருடங்களில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப மிகவும் கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியிருந்தது. வரி அதிகரிப்பு இலகுவானதாக இருக்கவில்லை. ஆனால் அது மட்டுமே பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒரே வழியாக விளங்கியது.

அடுத்தபடியாக நாட்டில் முதன்முறையாக இலங்கையில் கட்சி அரசியல் இல்லாத அரசாங்கத்தை அமைத்தோம். அதற்குள் சகல கட்சிகளும் அங்கம் வகித்தன. கட்சிப் பிளவுகள் இருக்கவில்லை. திறமை மற்றும் நம்பிக்கையை மாத்திரமே நம்பி செயற்பட்டோம். இல்லையெனில், இந்த ஜனநாயக முறைமையில், ஒரே ஒரு ஆசனம் இருந்த கட்சியிலிருந்து ஜனாதிபதி பதவிக்கு வந்திருக்க முடியாது. எனவே நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டத்திற்கு ஆதரவளிக்குமாறு அனைவரிடத்திலும் கோரிக்கை விடுத்திருந்தேன்.

ஒரு சிலர் அதற்கு முன்வரவில்லை. முடிந்தளவில் நான் எல்லோரையும் ஒன்றிணைத்துக்கொண்டு முன்னோக்கிச் சென்றேன். முதன்முறையாக அரசியல் சாராத அமைச்சரவையொன்று அமைக்கப்பட்டது. கட்சி பேதமின்றி நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட்டோம். குறுகிய மனப்பான்மை இன்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாம் இன்னும் மீளவில்லை. எரிபொருளும் உரமும் கிடைத்தாலும் நல்ல விளைச்சல் கிடைத்தாலும் பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் நாம் முழுமையாக விடுபடவில்லை.

இந்த ஆண்டு இறுதிக்குள் நாம் வங்குரோத்து நிலையில் இருந்து மீளக்கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால் அது போதாது. நமது நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். எனவே எமது பொருளாதார இலக்குகளின்படி சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வேண்டுமாயின், திட்டமிட்டபடி செயல்பட வேண்டும். எனவே நாம் அனைவரும் இந்த நேரத்தில் அரசியலை ஒதுக்கி வைத்து நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும். இரண்டாம் உலகப் போரில் இங்கிலாந்து செய்தது போல், நாம் அனைவரும் ஒன்றாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும்.

அரசியலை தனியாக வைத்துவிட்டு நாட்டிற்காக ஒன்றுபடுவோம். பழைய அரசியல் முறைமையால் நாட்டை முன்னேற்ற முடியாது. இந்த நாட்டின் இளைஞர்களுக்கான எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும். எனவே, அரசியலுக்கு அப்பாற்பட்டு நாட்டைக் கட்டியெழுப்பி, முன்னோக்கிச் செல்ல அனைவரும் முன்வாருங்கள்."– என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தியாகி சிவகுமாரன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலகட்ட களச்செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்கா பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்ட தருணத்தில் சயனைட் அருந்தி 05.06.1974 அன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட முதற் தற்கொடையாளி தியாகி பொன். சிவகுமாரன். அவரின் 50 ஆம் ஆண்டு வீரவணக்க நாள் இன்றாகும்.

புரட்சியும் எழுச்சியும் இளைஞர் சமூகத்திடமிருந்துதான் தோற்றம் பெறுகின்றன. ஆயுதம் தாங்கிய ஈழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றுவாயில் அவனும் ஒருவன்.

ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப கர்த்தா அவன்தான். சயனட் அருந்தி முதன்முதலில் மரணமான போராளியும் அவன்தான்.

எதிரியிடம் உயிருடன் பிடிபடக் கூடாது எனும் உயரிய கோட்பாட்டை தனக்கு தானே வகுத்து, வரித்து, சிறிலங்கா பொலிஸ் துறையால் துரத்தப் படும் போது தோட்ட வெளிகளால் ஓடிக் கொண்டிருந்தான் அவன். மரவள்ளித்தடி குத்திய காயத்தால் அவன் வீழ்ந்து விட்டதால் சிறிலங்கா பொலிஸ் அவனை நெருங்கி விட்டது. இனித் தப்ப முடியாது என்பதை நொடிப்பொழுதில் முடிவெடுத்த தியாகி சிவகுமாரன் தான் தயாராகத் தன் பாதுகாப்புக்கு வைத்திருந்த சயனைட்டை அருந்துகின்றான்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டவன் அங்கு தனது மூச்சை நிறுத்திக் கொண்டான். ஈழப்போராட்டத்தில் சயனைட்டை அறிமுகம் செய்து புதிய வரலாற்றைத் தொடக்கி வைத்தான். தேச விடுதலைக்காய் முதல் களப்பலியாகி இளைஞர்களின் இதயத்தைக் கொள்ளை கொண்டான்.

பிற்காலத்தில் அவனது சயனைட் கலாசாரத்தை இனவிடுதலைக்கான கள ஆயுதமாக வரித்துக் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், அந்தப் பாதுகாப்புக் காவலரணில் தன்னை தமிழ்த் தேசத்தின் விடுதலைப் பேரியக்கமாக விஸ்வரூபம் எடுத்துக் கொள்ளச் செய்தது.

தன் இன விடுதலைக்காக, அந்த விடுதலைக்காகப் போராடும் தன் இயக்கத்தைப் பாதுகாப்பதற்காக, அதன் மூலம் தன் இனத்தைக் காப்பதற்காக, எதிரியிடம் உயிருடன் பிடிபடக் கூடாது என்பதற்காக, தன்னுயிரை ஒறுத்து ஈகம் செய்வது - தற்கொடையாவது - தியாகத்தின் உச்சம்.

அந்த மார்க்கத்தை நடைமுறையில் செய்து காட்டி, ஈழத் தமிழ் இளைஞர்கள் மனதில் சுதந்திரத் தீயையும், தற்கொடை உணர்வையும் ஊட்டிய போராளி அவனே.

தியாகி சிவகுமாரின் மறைவு பற்றி 'தேசத்தின் குரல்' அன்ரன் பாலசிங்கம் எழுதுகையில் "விடுதலை உணர்வு மிக்க துணிச்சலும் கொண்ட ஒரு மகத்தான வீரனை இழந்து தமிழீழம் துயரில் ஆழ்ந்தது" என்றார்.

சிவகுமாரனை நினைவு கூருவதன் மூலம் தமிழ் தேசிய அரசியல் வரலாற்றையும் அதற்கு பங்களித்தவர்களையும் நாம் நினைவு கூருகின்றோம்.

தமிழ் மக்களுக்கெதிரான சிங்களத்தின் கொடுமைகளுக்கும், அநீதிகளுக்குமாக மட்டும் சிவகுமாரன் போராடவில்லை.

தமிழ்ச் சமூகத்திற்குள் புதைந்திருந்த சமூக அடக்குமுறைகளைப் பொசுக்கும் முயற்சிகளிலும் அவர் பின் நிற்கவில்லை. சாதியம், பெண் அடக்குமுறைப்போக்கு, மணக்கொடை போன்ற சமத்துவ வாழ்வுக்குப் புறம்பான போக்குகளையும் துணிந்து நின்று எதிர்த்தவன்.

மாணவர்களுக்கு முன் உதாரணமான முதற் தற்கொடையாளர் தியாகி பொன்.சிவகுமாரன் வீரச்சாவடைந்த நாளான ஜூன் 05 ஆம் திகதியை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்த முற்பட்ட போது, ஜூன் 05 ஆம் திகதி சர்வதேச சூழல் தினம் என்பதால் உலக ஒழுங்குடன் இணைந்து பயணிக்க வேண்டியதை கருத்தில் கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஜூன் 06 ஆம் திகதியை தமிழீழ மாணவர் எழுச்சி நாளாகப் பிரகடனப்படுத்தியதுடன் அத்தினம் நினைவு கூரப் பட்டும் வருகின்றது.



# கூட்டணி துணையுடன் மாத்திரமே பா.ஜ.க. ஆட்சி அமைக்க வாய்ப்பு

400 இற்கு மேற்பட்ட இலக்கு என்ற அறைகூவலுடன் தேர்தலை எதிர்கொண்ட பா.ஜ.க. தலைமையிலான என்.டி.ஏ. கூட்டணி 290 இற்கு மேற்பட்ட இடங்களை வசப்படுத்துகிறது.

பா.ஜ.க. தனிப்பெரும்பான்மை பெறாததால் தனது கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சி அமைக்கும் நிலையே மோடிக்கு மக்கள் அளித்த தீர்ப்பு என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது.

இந்தியா முழுவதும் 7 கட்டங்களாக நடந்த மக்களவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று காலை 7 மணிக்கு தொடங்கியது. மொத்தமுள்ள 543 தொகுதிகளில் ஏற்கெனவே சூரத் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் முகேஷ் தலால் வெற்றி பெற்ற நிலையில் எஞ்சிய 542 தொகுதிகளில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

இரவு 7 மணி நிலவரப்படி பா.ஜ.க. தனித்து 239 வசப்படுத்துகிறது. கூட்டணிக் கட்சிகளுடன் சேர்த்து பா.ஜ.க. கூட்டணி 290 இடங்களில் வெற்றி முகம் கண்டுள்ளது. ஆட்சியமைக்க 272 இடங்களில் வெற்றி பெற்றால் போதும் என்ற நிலையில் பா.ஜ.க. கூட்டணி பெரும்பான்மை பலத்தைப் பெற்றுள்ளது.

இது ஒருபுறம் இருக்க இண்டியா கூட்டணியில் காங்கிரஸ் 90 இடங்களை தனித்து வசப்படுத்துகிறது. கூட்டணிக் கட்சிகளுடன் சேர்த்து 235 தொகுதிகளை எட்டுகிறது.

இந்தச் சூழலில் ஆட்சி அமைப்பது பற்றி இன்று பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி முக்கிய ஆலோசனை நடத்துகிறது. இதில் தெலுங்கு தேசம் கட்சி, ஐக்கிய ஜனதா தளம் கட்சி கலந்து கொள்கிறது. மக்களவைத் தேர்தலில் இந்தக் கட்சியின் என்.டி.ஏவில் அங்கம் வகித்தன. இந்த இரு கட்சிகளின் தலைவர்களான சந்திரபாபு நாயுடுவும், நிதிஷ் குமாரும் இப்போது கிங் மேக்கர்களாக கவனம் ஈர்த்துள்ளனர்.

இந்த நிலையில், “பா.ஜ.க. கூட்டணிக்கு வரலாற்று வெற்றி அளித்த வாக்காளர்களுக்கு நன்றி. தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளின் மீதான நம்பிக்கைக்கு நன்றி” என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

235 தொகுதிகளை வசப்படுத்தி வலம் வரும் இண்டியா கூட்டணி இரு கட்சிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளதாக ஊகங்கள் வெளியான நிலையில், டில்லியில் நேற்று மாலை காங்கிரஸ் தேசியத் தலைவர் கார்கே, முக்கியத் தலைவர் ராகுல் காந்தி, சோனியா, பிரியங்கா காந்தி ஆகியோர் செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய ராகுல் காந்தி, “இண்டியா கூட்டணிக் கட்சிகள் நாளை கூடும். அப்போது, நாங்கள் எதிர்க்கட்சி வரிசையில் அமர விரும்புகிறோமா? அல்லது வேறு



முயற்சியை விரும்புகிறோமா என்பதை கூட்டணிக் கட்சியினருடன் பேசி, அவர்களின் கருத்துகளுக்கு மதிப்பு அளித்து முடிவு செய்வோம்” என்று தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் தடம் பதிக்காத பா.ஜ.க.

தமிழகத்தில் 39 மக்களவைத் தொகுதிகள், புதுச்சேரியில் ஒரு தொகுதி என 40 தொகுதிகள் கொண்ட இந்த மக்களவைத் தேர்தலில், தி.மு.க. தலைமையில் ஓர் அணி, அ.தி.மு.க. தலைமையில் ஓர் அணி, பா.ஜ.க. தலைமையில் ஓர் அணி, நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டி என 4 முனைப் போட்டி உருவானது.

தி.மு.க. தலைமையிலான அணியில் தி.மு.க. 22 தொகுதிகளிலும், காங்கிரஸ் தமிழகத்தில் 9 தொகுதிகளிலும், புதுச்சேரியில் ஒரு தொகுதியிலும் போட்டியிட்டன. சி.பி.ஐ, சி.பி.எம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி ஆகியவை தலா 2 தொகுதிகளிலும் போட்டியிட்டன. இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஒரு தொகுதியிலும், ம.தி.மு.க. ஒரு தொகுதியிலும் போட்டியிட்டன. மக்கள் நீதி மய்யம் கட்சியானது தி.மு.கவுக்கு ஆதரவு அளித்தது. போட்டியிட்ட அனைத்து தொகுதிகளையும் தி.மு.க. வசப்படுத்துகிறது.

ஆரம்பத்தில் தருமபுரியில் பா.ம.க. வேட்பாளர் சவுமியா அன்புமணி முன்னிலை வகித்த நிலையில், மதியத்துக்கு மேல் போக்கு மாறியது. அதுவும் கைநழுவிப் போனதால் தமிழகத்தில் பா.ஜ.க. தடம் பதிக்கவில்லை. ஆனால் கர்நாடகா, தெலுங்கானா, ஆந்திரா என பா.ஜ.க. தனது வெற்றியை கணிசமாகப் பதிவு செய்துள்ளது.

தமிழகத்தில் வெற்றியைப் பதிவு செய்யாவிட்டாலும் கூட வாக்கு சதவீதத்தில் முன்னேறியிருப்பது பா.ஜ.கவும் ஆறுதல். இவை தவிர மணிப்பூரில் காங்கிரஸ் வெற்றி, மகாராஷ்டிராவில் பா.ஜ.க. கூட்டணிக்கு அதிர்ச்சி, ஒடிசாவில் நவீன் பட்நாயக் கட்சிக்கு பின்னடைவு என பல்வேறு சுவாரஸ்யங்களை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது 2024 தேர்தல் முடிவுகள்.

இந்நிலையில், தேசிய ஜனநாயக் கூட்டணி, இண்டியா கூட்டணி தனித்தனியாக இன்று ஆலோசனை நடத்துகின்றன. இதன் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.




# தமிழகத்தில் 40 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றிபெற்றது

தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் புதுச்சேரியில் 1 தொகுதியிலும் பதிவான வாக்குகள் நேற்று காலை 8 மணி தொடங்கி எண்ணப்பட்ட நிலையில், தமிழகத்தில் 40 இடங்களையும் தி.மு.க. கூட்டணியே வென்றுள்ளது. இது மட்டுமல்லாமல் தமிழகத்தின் விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதியிலும் தி.மு.க. கூட்டணி சார்பில் போட்டியிட்ட காங்கிரஸ் வேட்பாளர் தாரகை வெற்றி பெற்றுள்ளார்.


தமிழகத்தில் 39 மக்களவைத் தொகுதிகள், புதுச்சேரியில் ஒரு தொகுதி என 40 தொகுதிகள் கொண்ட இந்த மக்களவைத் தேர்தலில், தி.மு.க. தலைமையில் ஓர் அணி, அ.தி.மு.க. தலைமையில் ஓர் அணி, பா.ஜ.க. தலைமையில் ஓர் அணி, நாம் தமிழர் கட்சி தனித்துப் போட்டி என 4 முனைப் போட்டியுடன் தேர்தல் களம் சூடுபிடித்த நிலையில் , ஏனைய தென் மாநிலங்களில் பா.ஜ.கவின் வீச்சு பெரிய அளவில் இருக்க தமிழகத்தில் மட்டும் பா.ஜ.கவை கணக்கைத் தொடங்கவிடாமல் கட்டுப்படுத்தியுள்ளது தி.மு.க. கூட்டணி.

இருப்பினும், இந்த மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. பல்வேறு இடங்களில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. குறிப்பாக, மதுரை மக்களவைத் தொகுதியில் பா.ஜ.க. வேட்பாளர் இரண்டாம் இடம் பிடித்து அ.தி.மு.கவை மூன்றாம் இடத்துக்குத் தள்ளி அந்தக் கட்சிக்கு அதிர்ச்சியை கொடுத்துள்ளது. மதுரை மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளில் மதுரை கிழக்கு, மதுரை தெற்கு, மதுரை மத்திய தொகுதிகளில் அ.தி.மு.கவை விட பா.ஜ.க. அதிக வாக்குகள் பெற்றது. மேலூர், மதுரை வடக்கு, மதுரை மேற்கு தொகுதிகளில் பா.ஜ.கவை விட அ.தி.மு.க. அதிக வாக்குகளை பெற்றுள்ளது.

# ஆந்திராவில் ஆட்சியை பிடித்தது சந்திரபாபுவின் தெலுங்கு தேசம்

தமிழகத்தின் அண்டை மாநிலமான ஆந்திர மாநிலத்தில் ஆட்சியை பிடித்துள்ளது தெலுங்கு தேசம் கட்சி, பா.ஜ.க, ஜனசேனா கூட்டணி. 175 சட்டப்பேரவை தொகுதிகளில் இக்கூட்டணி 164 தொகுதிகளில் வெற்றியை உறுதி செய்துள்ளது இக்கூட்டணி.

தெலுங்கு தேசம் 135 தொகுதிகளிலும், ஜனசேனா 21 தொகுதிகளிலும், பா.ஜ.க 8 தொகுதிகளிலும் வெற்றியை உறுதி செய்துள்ளன. அதேநேரம், ஆளும் ஒய்.எஸ். ஆர் காங்கிரஸ் கட்சி 11 தொகுதிகளில் வெற்றியை உறுதி செய்துள்ளது. காங்கிரஸ் கூட்டணி ஒரு இடம் கூட வெற்றி பெறவில்லை.



குப்பம் தொகுதியில் 9 ஆவது முறையாக போட்டியிட்டுள்ள தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு 48006 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி முகத்தில் உள்ளார். இதேபோன்று புலிவேந்துலா தொகுதியில் முதல்வர் ஜெகன்மோகன் ரெட்டி 116315 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். பிட்டாபுரம் தொகுதியில் நடிகர் பவன் கல்யாண் 134394 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

இதற்கிடையே, எதிர்வரும் 9 ஆம் திகதி முதல்வராக சந்திரபாபு நாயுடு பதவியேற்க உள்ளார் என தெலுங்கு தேசம் கட்சி அறிவித்துள்ளது.



# தமிழகத்தில் முழு அளவில் மோடி எதிர்ப்பு அலை; தேர்தல் வெற்றி தொடர்பில் மு.க.ஸ்டாலின் கருத்து

"மோடியின் எதிர்ப்பு அலை இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருக்கிறது. அதே போல், இன்று தமிழகத்தில் முழு அளவுக்கு எதிர்ப்பு அலை இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு."

– இவ்வாறு தேர்தல் முடிவுகள் குறித்து சென்னையில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றதையொட்டி தி.மு.க. தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த மாபெரும் வெற்றிக்குக் காரணமான அன்பார்ந்த தமிழக மக்களுக்கும் தலைவர் கருணாநிதியின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளுக்கும் கோடான கோடி நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'பாசிசத்தை வீழ்த்தி இந்தியாவைக் காப்போம்', என்ற முழக்கத்தோடு பரப்புரைப் பயணத்தைச் செய்த தி.மு.க. தலைமையிலான இண்டியா கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், செயல்வீரர்களுக்கும், தொண்டர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். இந்த நாடாளுமன்றத் தேர்தலில் மீதமிருந்த ஒரு தொகுதியையும் சேர்த்து நாற்பதுக்கு நாற்பதையும் தமிழக மக்கள் வழங்கி இருக்கிறார்கள். அகில இந்திய அளவில் இண்டியா கூட்டணியை ஜனநாயகச் சக்திகள் அனைவரும் சேர்ந்து உருவாக்கினோம். 400 இடங்களில் வெற்றி பெறுவோம் என்று கூறி, தங்களுக்கு யாருமே எதிரியாக இல்லை என்ற பிம்பத்தை பா.ஜ.க. ஏற்படுத்தியது. ஆனால், ஆட்சி அமைக்கும் தனிப்பெரும்பான்மைக்குத் தேவையான இடங்களைக் கூட பெற முடியாத அளவுக்கு பா.ஜ.க. இப்போது தள்ளப்பட்டிருக்கிறது. அது மாதிரி தான் இப்போதுவரை செய்திகள் வந்துகொண்டிருக்கிறது.

இரண்டு நாள்களுக்கு முன்புகூட கருத்துக்கணிப்பு என்ற பெயரில் உளவியல் ரீதியான தாக்குதலை பா.ஜ.க. தொடுத்தது. ஆனால் இந்த தேர்தல் முடிவுகள் என்பது, அரசியல் சாசனத்தை மாற்றிவிடலாம், வெறுப்பு பரப்புரைகளால் மக்களைப் பிளவுபடுத்தலாம் என்று நினைத்த பா.ஜ.கவுக்கு எதிரான மக்களுடைய தீர்ப்பு. இதுதான் எங்கள் கூட்டணியின் வெற்றி."– என்றார்.

# மக்களவைத் தேர்தல் முடிவுகளால் அ.தி.மு.க. சோர்வடைய மாட்டாது

## எடப்பாடி பழனிசாமி கூறுகின்றார்

"தற்போது வெளிவந்துள்ள நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் முடிவுகள், மக்களின் ஏகோபித்த எண்ணங்களை முழுமையாக பிரதிபலிக்கும் முடிவு அல்ல. இந்தத் தேர்தல் முடிவுகள் நம்மை சோர்வடையச் செய்யாது."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

" நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் முடிவுகள் நாம் எதிர்பார்த்தது போலவே அதிகார பலமும், பண பலமும், பொய்ப் பிரச்சார பலமும், அறத்துக்கு அப்பாற்பட்ட சூழ்ச்சி பலமும் மிகுந்தவர்களுக்கு சாதகமாக வந்திருக்கின்றன.

தற்போது வெளிவந்துள்ள நாடாளுமன்ற மக்களவைப் பொதுத் தேர்தல் முடிவுகள், மக்களின் ஏகோபித்த எண்ணங்களை முழுமையாக பிரதிபலிக்கும் முடிவு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, அ.தி.மு.க. வேட்பாளர்களுக்கும், கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களுக்கும் வாக்களித்த வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகியோர் உருவாக்கி, கட்டிக் காத்து, வழிநடத்திய அ.தி.மு.கவை சூழ்ச்சியால் வீழ்த்தி, சுயநலத்துக்காக கபளீகரம் செய்ய திரை மறைவிலும், வெளிப்படையாகவும் நடைபெற்ற சூழ்ச்சியையும், சூதுகளையும் மிகவும் நுணுக்கமாகப் புரிந்துகொண்ட கட்சித் தொண்டர்களின்



அன்புக் கட்டளைகளுக்கு ஏற்பவே, "கொள்கைக்காக வாழ்வோம் எது வந்தாலும் ஏற்போம்" என்று இந்தத் தேர்தலில், களம் இறங்கியது அ.தி.மு.க.

இந்தத் தேர்தல் முடிவுகள் நம்மை சோர்வடையச் செய்யாது. 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கான பாடமும், படிப்பினையும் நமக்குக் கிடைத்திருக்கிறது. 2026 சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றி பெறுவோம். எந்தப் பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், இதுநாள்வரை அ.தி.மு.க. மக்களுக்கு ஆற்றிய தொண்டுகளை மனதில் கொண்டு நம் கூட்டணிக்கு வாக்களித்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்."– என்று குறிப்பிட்டுள்ளார்.




# எனது நினைவலைகளில்
# தியாகி பொன் சிவகுமாரன்



**சி. தவராசா**
(முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண சபை)

இன்று ஜூன் 5ஆம் திகதி, சயனைட் கலாசாரத்தை தமிழ்ப் போராளிகள் மத்தியில் விதைத்த தியாகி பொன் சிவகுமாரன் இறந்து 50 ஆண்டுகளா கின்றன. ஏற்கனவே கைது செய்யப்பட்டு பொலிஸாரின் சித்திரவதைகளுக்கு ஆளான அனுபவத்தைக் கொண்ட சிவ குமாரன், இன்னொரு சந்தர்ப்பத்தில் பொலிஸாரினால் தான் கைது செய்யப்படு வேனாகின் சயனைட் அருந்தி தன்னு யிரை மாய்த்துக் கொள்வேன் எனப் பல தடவைகள் கூறியமை இன்றும் என் நினைவலை களிலிருந்து நீங்க மறுக்கிறது.

தனது கூற்றினை அவர் செயல் வடிவத்திலும் நிரூபித்துக் காட்டியவர். அவருடன் கூடிப் பழகிய வர்களில் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் மட்டுமே இன்று அவரை நினைவுகூரக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

அவரின் ஆரம்பகாலச் செயற்பாடுகளிலிருந்து அவருடன் நெருங்கிப் பழகியவன் என்ற வகை யில் அவர் தொடர்பான எனது அனுபவங்களை இக்கட்டுரை மூலம் பகிர்ந்துகொள்கின்றேன்.

தமிழர்களின் போராட்ட வரலாற்றில் சிவகுமார னைப போல பல போராளிகளின் உயிர்த் தியா கங்கள், அர்ப்பணிப்புகளின் விளைவாக ஏற்படுத் தப்பட்டதே இலங்கை – இந்திய ஒப்பந்தமும். அதன டிப்படையில் உருவான 13ஆவது அரசமைப்புத் திருத்தமும், மாகாணசபை முறைமையுமாகும்.

இப்போராட்ட வரலாற்றுடன் எவ்வித தொடர்பு களும் அற்றவர்களும் இவ் வரலாற்று பின்னணி தெரியாதவர்களுமே இன்று மாகாண சபைகளின், குறிப்பாக வடக்கு மாகாண சபையின், நிறைவேற்று செயற்பாடுகளுக்குப் பொறுப்பானவர்களாக இருந்த வருவகின்றமையுடன்,தமது சொந்த நலன்களை முன்னிறுத்தி அவர்கள் செயற்பட்டு வருகின்றமையும் வேதனைக்குரிய விடயமாகும்.

சிவகுமாரன் உரும்பிராயினைச் சேர்ந்த பொன் னத்துரை – அன்னலட்சுமி தம்பதியினருக்கு நான் காவது புதல்வனாக 26.08.1950ஆம் ஆண்டு பிறந்தார். சிறுவயதில் அவரை 'திரவியம்' என செல்லமாக அழைத்தனர். யாழ். இந்துக் கல்லூரி யில் தனது படிப்பை முடித்துக்கொண்ட அவர், கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்ற 1970 ஆரம்ப காலப்பகுதியில்தான் அவருடனான நட்பு எனக்கு ஏற்பட்டது.

தொழில்நுட்பக் கல்லூரியில் படித் துக்கொண்டே கொக்குவில் கிழக்கில் முத் துக்குமாரசாமி என்பவரிடம் ஆங்கிலம் கற்பதற்காக வந்தபோதே அவருடன் நெருக்கமான நட்பு ஆரம்பமானது. எமது உரிமைகளை ஜனநாயக வழிகளில் வென்றெடுக்க முடியாது என்பதனை அவர் அடிக்கடி சொல்வதுண்டு. ஆயுதப் போராட்டத்தினூடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்று கூறுவதுடன் நின்றுவிடாமல் ரின்பால் தகரப்பேணி யில் வெடிகுண்டு எவ்வாறு தயாரிப்பது என்பது தொடர்பாகவும் எமக்கு எடுத்துரைப்பார். இவை யெல்லாம் எமக்கு அந்நேரத்தில் புதுமையான மற்றும் ஆச்சரியமான விடயங்களாகவே இருந்தன.

அத்துடன் நின்றுவிடாமல் உரும்பிராயில் உள்ள தனது வீட்டிற்கு எம்மை அழைத்துச் சென்று ரின்பால் தகரப்பேணியில் வெடிகுண்டு தயாரிக்கும் முறையை செயல்வடிவிலும் காட்டினார்.

தகரப்பேணியில் வெடிகுண்டு தயாரிப்பது, அதற்கு தேவையான கந்தகம், பொட்டாசியம் போன்ற மூலப் பொருள்களையும் சிவகுமாரன் எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்பது தொடர்பாக நான் அறிந்தவற்றினையும் பதிவிட விரும்புகின் றேன். சிவகுமாரனுடன் குட்டிமணியின் அண்ண னின் மகன் ஒருவரும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துள்ளார். இருவருக்கும் இடை யில் இருந்த ஒருமித்த சிந்தனையின் விளைவாக குட்டிமணியின் அண்ணனின் மகன் வல்வெட்டித் துறையில் குட்டிமணியினால் நடாத்தப்பட்டுவந்த கோழிப்பண்ணைக்கு சிவகுமாரனை அழைத்துச் சென்றுள்ளார்.

அக்காலகட்டத்தில் வல்வெட்டித்துறையில் கடத் தல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கும் கடற்படையின ருக்குமிடையில் பாரிய முரண்பாடு நிலவிவந்தது. இம்முரண்பாடுகளின் ஒரு வெளிப்பாடே குட்டிமணி

தொடர்ச்சி ▼

# எனது நினைவலைகளில்
# தியாகி பொன் சிவகுமாரன்

தொடர்ச்சி ▲

யினால் நடாத்தப்பட்ட கோழிப்பண்ணை என்ற போர்வையில் சிறிய குண்டுகளைத் தயாரிக்கும் செயற்பாடாகும். சிவகுமாரன் அப்பண்ணையி லேயே குண்டுகளைத் தயாரிக்கும் முறைமையினை கற்றுக்கொண்டார் எனவும் அதற்குரிய பொருள்களைப் பெற்றுக்கொண்டார் எனவும் நான் அறிகின்றேன்.

சிவகுமாரன் ஓர் ஆயுதப் போராளி மட்டுமல்லர். தமிழர்கள் மத்தியிலிருந்த சீர்கேடுகளை, குறிப்பாக சாதிக் கொடுமைகளை இள வயதிலிருந்தே எதிர்த்து வந்த ஒருவர். தனது இளம் வயதிலிருந்தே சமபந்தி போஜனத்தை நடத்தி இளைஞர்களிடையே எழுச்சியை உருவாக்கியவர். அத்துடன் மரண வீடு களில் பறை மேளம் அடிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்ற முயற்சியில் உரும்பிராயிலுள்ள அச்சமூகத்தைச் சேர்ந்தவர்களுடன் கலந்துரையாடி பறை மேளங்களை உரும்பிராய் சந்தியில் போட்டு உடைத்து எரித்தார். அக்காலத்தில் யாழ்ப்பாணத் தில் கூர்மையடைந்திருந்த சாதி வேறுபாடுகளை களைய வேண்டும் என்பதில் ஜனநாயக வழியில் முனைப்பாக செயற்பட்டமையுடன், அப்போதைய அரசினால் புத்தூர் போன்ற பிரதேசங்களில் ஏழ்மை நிலையிலிருந்தவர்களை அரசின் அனுசரணை யுடன் பௌத்த மதமாற்றம் செய்யப்படுவதனை எதிர்த்து ஜனநாயக வழியிலான போராட்டங்களை முன்னெடுத்தார். எம்மையும் அதில் இணைத்துக் கொண்டார்.

ஆசிரியர் முத்துக்குமாரசாமி ஆங்கிலம் கற் பிப்பது மட்டுமல்லாமல், அரசியல் போராட்ட வர லாறுகளையும் இடையிடையே எடுத்துரைப்பதுண்டு. அவரது வீட்டின் அண்டைய வீட்டில் அவரது தம்பி யார் ஆனந்தகுமாரசாமி வசித்து வந்தார். அவர், அப்போதைய அரசியல் சூழ்நிலைகளில் ஆயுதப் போராட்டத்தின் மூலமே தீர்வினை பெறலாம் என் பதில் நம்பிக்கை கொண்டிருந்தார். அவர்களது வீட்டிற்கு அண்மையில் ஞானசுந்தரம் என்ற இளைப் பாறிய பொலிஸ்காரர் இருந்தார். அவர், வன் முறைப் பாதை வழியாகத்தான் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்கும் என்பதில் அதீத நம்பிக்கை கொண் டிருந்தமை மட்டுமல்லாமல், இளைஞர்கள் மத்தி யில் அது தொடர்பாக தீவிர பிரச்சாரத்திலும் ஈடு பட்டிருந்தார். இந்த மூன்று வீடுகளிலும்தான் சிவ குமாரனுடன் நானும் அந்நேரத்தில் அதிக நேரங்களை செலவிட்டு வந்துள்ளோம்.

சிவகுமாரன் வல்வெட்டித்துறையிலிருந்து கொண்டுவந்த கந்தகம், பொட்டாசியம் போன்ற வெடிமருந்துகளை ஆனந்தகுமாரசாமியின் வீட்டில் பதுக்கி வைத்திருந்தார். இவ்வாறு பதுக்கி வைக் கப்பட்டிருந்த வெடிமருந்துகளில் ஒருபகுதியினை பாவித்து குண்டை தயாரித்து அந்நேரம் பிரதி யமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறி என்பவர் உரும்பிராயில் உள்ள பாடசாலையொன்றின் நிகழ்விற்கு வந்திருந்தவேளையில் அவரது காரின் சில்லின் பின்பக்கமாக வைத்துள்ளார். நிகழ்வு முடிவடைந்து பிரதியமைச்சரை ஏற்றுவதற்காக கார் புறப்படவிருந்த வேளையில் குண்டுவெடித்தது. இது அவரின் முதற் பரிசோதனை. ஆதலினால் காருக் குச் சிறிது சேதமேற்பட்டதேயொழிய வேறு சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

உரும்பிராயில் தீவிர அரசியல் போக்குள்ளவர் சிவகுமாரன் என்பது ஊரறிந்த விடயம். இதனால் இதனை யார் செய்திருப்பார் என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. அதனடிப்படையில் பொலிஸார் சிவகுமாரனை கைதுசெய்தனர். சிவகுமாரன் கைது செய்யப்பட்டமையைத் தொடர்ந்து நாமனைவரும் கைது செய்யப்படுவோம் என்பதனை நாம் உணர்ந்து கொண்டோம். அடுத்த நாள் இரவு முத்துக்குமார சாமியின் வீட்டில் இது தொடர்பாக கூடி ஆராய்ந்து



கொண்டிருந்த வேளையில் பெருமளவில் பொலி ஸார் அவரது வீட்டுக்கு வந்தனர். பொலிஸாரின் வரு கையை கண்ட நாமெல்லோரும் அவரின் வீட்டின் பின்பக்கமாக ஓடி தப்பித்துக்கொண்டோம். முத் துக்குமாரசாமி ஆசிரியர் மட்டும் தப்பியோட மறுத்து பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். அத னைத் தொடர்ந்து ஆனந்தகுமாரசாமியை கைது செய்ய பொலிஸார் முனைந்த வேளை அவரும் வீட்டிலிருந்து தப்பிச்சென்றதால் அவரது அண்ணன் முத்துக்குமாரசாமியை கைது செய்தனர்.

சில நாள்களாகத் தலைமறைவாக இருந்த ஆனந்தகுமாரசாமி சரணடைந்த பின்னரே அவரது அண்ணன் முத்துக்குமாரசாமி விடுவிக்கப்பட்டார்.

சிவகுமாரனும் ஆனந்தகுமாரசாமியும் அநுராத புர சிறையில் அடைக்கப்பட்டனர். அக்கால சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இவ்வாறான குற்றச் சாட்டுகளுக்கு பிணை எடுப்பதானால் கொழும்பி லுள்ள மேல் நீதிமன்றத்திற்கே செல்ல வேண்டும். அத்துடன் மேல் நீதிமன்றத்தில் எல்லா சட்டத்தரணி களும் வாதாட முடியாது. நானும் சிவகுமாரனின் தாயாரும் அமிர்தலிங்கத்திடம் சென்று சிவகுமா ரனை பிணையில் எடுப்பதற்கு ஆவன செய்யும்படி வேண்டினோம். எங்கள் கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட அவர், கொழும்பில் வசிக்கும் இராணி

தொடர்ச்சி ▼

# எனது நினைவலைகளில்

# தியாகி பொன் சிவகுமாரன்

தொடர்ச்சி ▲

சட்டத்தரணி திருச்செல்வம் அவர்களுக்கு ஓர் கடிதத்தினை கொடுத்து அவரைச் சென்று சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்.

நானும் சிவகுமாரின் தாயாரும் மாளிகைபோல இருந்த கொழும்பிலுள்ள அவரது வீட்டிற்கு சென்றிருந்தோம். அமிர்தலிங்கத்தின் கடிதத்தை படித்துவிட்டு "எங்களைக் கேட்டா குண்டு வச்சீங்க" என்று ஏசினார். ஒருவாறு அவரைச் சமாளித்து சிவகுமாரனுக்காக ஆஜராக வைத்து பிணையில் விடுவிக்க வழிகோரினோம்.

சிவகுமாரன் ஒருநாள் என்னை பல்கலைக் கழகத்தில் தமிழ் மன்றச் செயற்பாடுகளில் ஈடுபட்டு படிப்பை முடித்துக்கொண்டு வந்திருப்பவரும், போராட்டத்தில் தீவிர ஆர்வம் கொண்டவருமான உரும்பிராயைச் சேர்ந்த நண்பர் ஒருவரை சந்திக்க கூட்டிச் சென்றார். அவ்வாறு அறிமுகப்படுத்தப்பட்டவர் சத்தியசீலன் ஆவார்.

அக் காலகட்டத்தில் சிறிமாவோ பண்டாரநாயக்க அரசினால் பல்கலைகழகத் தரப்படுத்தல் முறை


'மீண்டும் பிறப்பேன்
விடுதலைக்கு
போராடுவேன்'

...மாரன் மரணம்

சாவேந்தன் சிவகுமாரனுக்கு
சமுதாயத்தின் இறுதி அஞ்சலி!

அறிமுகமானது. இனரீதியான தரப்படுத்தல்தான் முதலில் அறிமுகமானது. தரப்படுத்தலிற்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டுமென முடிவுசெய்தோம். இது தொடர்பாக ஆர்வமுள்ள பலரை இணைத்து ஒரு ஆலோசனை கூட்டம் நடத்தினோம். மலாயன் கபேக்கு மேலிருந்த மண்டபத்தில் கூட்டம் நடந்தது. சத்தியசீலன், மாவை, லோரன்ஸ், மகா உத்தமன், அரியரட்ணம் (புன்னாலைகட்டுவன்), இலங்கை மன்னன், முத்துகுமாரசுவாமி, சந்திரகுமார் (பிரான்ஸ்), சபாலிங்கம், பலநடராஜ ஐயர் எனப் பலர் கூட்டத்திற்கு வந்திருந்தது நினைவிலிருக்கிறது. மாணவர் பேரவையென செயற்படுவது, தரப்படுத்தலுக்கு எதிராகப் போராட்டம் செய்வதென முடிவு செய்தோம்.

இம் மாணவர் பேரவை உயர்தர மாணவர்கள் பலரை ஒன்றுதிரட்டி தரப்படுத்தலிற்கு எதிராக மாபெரும் ஊர்வலத்தினை நடாத்தியது. இத் தரப்படுத்தலிற்கெதிரான போராட்டங்களில் சிவகுமாரனின் பங்களிப்பு அளப்பரியது. அதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டத்தினை சுமந்து சென்ற அமைப்பாக மாணவர் பேரவை அமைகின்றது. இது பிற்காலத்தில் பல ஆயுதக் குழுக்களின் வளர்ச்சிக்கு வித்திட்ட தாய் அமைப்பாகவும் விளங்குகின்றது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அனுசரணையாகச் செயற்பட்ட யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்வதற்கு யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசலையின் முன்பு எடுத்த முயற்சி துரையப்பா காலதாமதமாக வந்ததால் அவரை உயிர் பிழைக்க வைத்தது. இக் கொலை முயற்சியைத் தொடர்ந்தும் சிவகுமாரன் யாழ் சிறையிலும், அனுராதபுரம் சிறையிலும் ஒன்றரை வருடங்களிற்கு மேலாகக் கைதியாக இருந்தார்.

1974ம் ஆண்டு தை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஓர் தீவிர தொண்டனாகச் சிவகுமாரன் கடமையாற்றினார். அம் மகாநாட்டின் இறுதி நாளன்று பொலிஸாரினால் நடாத்தப்பட்ட அடாவடித்தனத்தினை நேரில் பார்வையிட்ட சிவகுமாரன் அதற்குப் பொறுப்பானவர்களைப் பழி வாங்கியே தீருவேனென்று அன்றே சபதமெடுத்துக் கொண்டார். அவ் உள்ளக் கொதிப்பின் விளைவே தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு அசம்பாவிதத்திற்குப் பொறுப்பதிகாரியாக இருந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சந்திரசிறி மீது குண்டு வீச்சு நடாத்தி சுட முற்பட்டமைக்குக் காரணமாகும். அம்முயற்சி வெற்றியளிக்காவிட்டாலும் எப்படியோ பழிவாங்கியே தீருவேன் என்ற முனைப்புடன் செயற்பட்டதன் விளைவே சிவகுமாரன் அத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடைபெற்று ஆறு மாதத்திற்குள்ளேயே தன்னுயிரைப் பலி கொடுக்கும் நிலைக்கு இட்டுச் சென்றது.

பொலிஸ் தேடுதல்களிலிருந்து ஒளிந்து வாழ வேண்டிய நிலை மற்றும் தனது தீவிர செயற்பாடுகளுக்கு நிதி ஒரு தடையாக இருந்த சூழலில் பலரிடம் சென்று நிதியுதவி கேட்டும் எல்லோரும் கைவிரித்த நிலையிலேயே கோப்பாய் கிராமிய வங்கியில் பணத்தை கொள்ளையடிக்கும் முடிவிற்கு சிவகுமாரன் வந்தார். அதுவும் அவ் வங்கியில் வேலை செய்த ஊழியர் ஒருவரின் தகவல்களின் அடிப்படையில்தான் பணத்தைக் கொள்ளையிடத் திட்டமிட்டார். இருந்தும் அச் செயற்பாடு அவருக்கு காலனாக மாறிவிட்டது. அக் கொள்ளைச் சம்பவத்திற்கு முன்பே தன்னிடமிருந்த சயனைட்டினைப் பாணில் நனைத்துக் காகத்திற்குக் கொடுத்து ஒத்திகையையும் சிவகுமாரன் பார்த்திருக்கின்றார்.

தினமும் தவறாது உடற்பயிற்சியில் ஈடுபடும் சிவகுமாரன் ஒருநாள் உடற்பயிற்சி செய்யும் போது கதவின் மேற்புறத்திலிருந்த திறாங்கு அவரின் காலில் குற்றி காயத்தை ஏற்படுத்தியது. வங்கியில் கொள்ளையிட முற்பட்டபோது உசாரடைந்த ஊழியர்களின் செயற்பாட்டினால் இவர்கள் வங்கியிலிருந்து ஓடிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது பொலிஸாரும் பின் தொடரவே தோட்டங்களிற்கூடாக ஓடிய சிவகுமாரன் காலில் ஏற்கனவே இருந்த காயத்தில் மரவள்ளிக் கட்டை ஏறியதன்

தொடர்ச்சி ▼

# எனது நினைவலைகளில்

# தியாகி பொன் சிவகுமாரன்

தொடர்ச்சி ▲

விளைவாகத் தொடர்ந்து ஓட முடியாமல் நின்ற சந்தர்ப்பத்தைப் பாவித்து பொலிஸார் அவரை நெருங்கினர். சிவகுமாரன் அப் பொலிஸாரின் தன்னியக்கத் துப்பாக்கியைப் பறித்து அவரைச் சுட முயன்றிருக்கிறார். அப்போது அப் பொலிஸ் அதிகாரி தனக்கு மூன்று பெண் பிள்ளைகள் என்றும் அவர்களுடைய தாயாரும் இறந்து விட்டதாகவும் தானும் இறந்தால் அப்பிள்ளைகள் அநாதைகளாகி விடுவார்களென்று கெஞ்சியதன் அடிப்படையில் (சிவகுமாரன் அனுராதபுர சிறையிலிருந்த காலங்களில் சிங்களம் பேசுவதற்கு நன்கு கற்றுக் கொண்டவர்) சிவகுமாரன் அவரைச் சுடாது தன்னிடமிருந்த சயனைட்டை தானே அருந்தித் தன்னுயிரை மாய்த்துக் கொண்டார்.

சிவகுமாரன் வைத்தியசாலையில் இறந்த பின்பு அவரது கைக் கடிகாரம் மற்றும் அவரது காற்சட்டைப் பையிலிருந்த பணம் ஆகியவற்றை சிவகுமாரனின் தாயிடம் கையளித்துவிட்டு "உங்கள் மகன் ஓர் தெய்வப் பிறவி நினைத்திருந்தால் என்னைச் சுட்டிருக்கலாம்" எனக் கூறி அவரது காலில் வீழ்ந்து வணங்கியுள்ளார் அந்தப் பொலிஸ் அதிகாரி.

தியாகி சிவகுமாரனின் உருவச்சிலை உரும்பிராயில் மூன்று தடவைகள் அமைக்கப்பட்டு இராணுவத்தினரால் உடைக்கப்பட்ட நிலையில் வெண்கலத்தைக் கொண்டு அமைக்கப்பட்ட நான்காவது சிலையே இன்று உரும்பிராய் சந்தை வளாகத்தில் காணப்படுகின்றது. அவரது உடல் தகனம் செய்யப்பட்ட வேம்படி மயானத்தில் நினைவுத் தூபியும் அமைந்துள்ளது. அவரது ஐம்பதாவது ஆண்டு நினைவு தினம் இன்று ஜூன் 5 ஆம் திகதி 2024 இல் உரும்பிராய் சிலை மற்றும் தூபி அமைந்துள்ள இடங்களில் நடைபெறவுள்ளது.

தமிழர் போராட்ட வளர்ச்சி என்பது ஒரு வகையான அஞ்சலோட்டம். அந்த அஞ்சலோட்டத்தில் ஆயுதப் போராட்டமென்ற அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தது சிவகுமாரனென்றால் அது மிகையாகாது. தியாகி சிவகுமாரன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக என்றென்றும் நிலைத்து நிற்பானென்பது திண்ணம்.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 19 மாணவருக்கு 3ஏ பெறுபேறு!

(த.சுபேசன்)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 19 மாணவர்கள் 3ஏ பெறுபேற்றைப் பெற்றுள்ளனர் என்று பாடசாலை அதிபர் ந.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தர பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கலைப் பிரிவில் தோற்றிய பொ.ராகவி, ச.சாம்பவி, ம.டிலோஜினி, ப.மதுசனா, தெ.நதீபா, ச.தசானி, செ.கலைக்சனா–

விஞ்ஞானப் பிரிவில் தோற்றிய யோ.ரம்மியராஜ், செ.சபீனா, கு.கரிகரன் –

கணிதப் பிரிவில் தோற்றிய ஜெ.வைஷ்ணவி, சி.சனுஜா, சி.மயூர்தனன், ஆ.வேனுசன், அ.யனுசன், ம.தர்சிகா, ஸ்ரீ.வனோஜா, சு. சான்சுதன் மற்றும் வர்த்தக பிரிவில் தோற்றிய பா.கோபிசா ஆகியோர் 3ஏ சித்தியைப் பெற்றுள்ளனர்.

அதேசமயம் 2ஏபி பெறுபேற்றை 09 மாணவர்களும், 2ஏசி பெறுபேற்றை 03 மாணவர்களும், ஏ2பி பெறுபேற்றை 10 மாணவர்களும், ஏபிசி பெறுபேற்றை 08 மாணவர்களும்,3பி பெறுபேற்றை 04 மாணவர்களும் மற்றும் 2பிசி பெறுபேற்றை 15 மாணவர்களும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கார்த்திகைப் பூ படம் பொறித்த பாதணிகளை சந்தையில் இருந்து மீளப் பெற்றது டி.எஸ்.ஐ.!

(பிரபாகரன் டிலக்சன்)

டி.எஸ்.ஐ காட்சியறையில் கார்த்திகைப் பூ படம் பொறித்த பாதணி விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் எழுந்த சர்சைகளையடுத்து அந்தப் பாதணிகளை முழுமையாக மீளப்பெறுவதாக டி.எஸ்.ஐ. நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

எனினும் அச்சம்பவம் தொடர்பில் எதுவித மன்னிப்பும் கோரவில்லை.

கொழும்பு, வெள்ளவத்தை டி.எஸ்.ஐ. காட்சியறையில் கார்த்திகைப் பூ பொறிக்கப்பட்ட பாதணிகள் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பில் பலரும் தமது எதிர்ப்புகளை வெளியிட்டிருந்தனர். வடமாகாண டி.எஸ்.ஐ. முகவர்களிடம் பல எதிர்ப்புகள் பொதுமக்களால் முன்வைக்கப்பட்டன. அதையடுத்து அவற்றை டி.எஸ்.ஐ. நிறுவனத்திற்கு வடக்கு முகவர்கள் தெரியப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பில் டி.எஸ்.ஐ. நிறுவனம் கடிதம் ஒன்றை வடக்கு முகவர்களுக்கு வழங்கியுள்ளது. அக் கடிதத்தில் –

"நடளாவிய ரீதியில் உள்ள விற்பனை காட்சிக்கூடங்களில் இருந்த கார்த்திகைப் பூ பொறித்த பாதணிகளை சந்தையில் இருந்து உடன் மீளப் பெற்றுக்கொண்டுள்ளதாகவும்,



டி.எஸ்.ஐ. நிறுவனமானது இலங்கையில் உள்ள எவருக்கும் உடல், உளரீதியாக தீங்கிழைக்ககூடிய உற்பத்தியை மேற்கொள்வதோ அன்றி விநோயோகிப்பதோ ஒருபோதும் எங்கள் எண்ணமாக இருந்ததில்லை. இருக்காது என்பதை உறுதிபடக்கூறுகின்றோம்.

எமது உற்பத்திகளின் உயர் தரத்தையும் கண்ணியத்தையும் பேணுவதில் எமது கம்பனி அர்ப்பணிப்போடு செய்யப்படுகிறது" என டி.எஸ்.ஐ. பொது முகாமையாளர் வடபகுதி முகவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கங்கைகளின் நீர்மட்டம் உயர்வடைவதால் தொடர்ந்தும் வெள்ள அபாய எச்சரிக்கை

நில்வளா கங்கையின் நீர்மட்டம் உயர்வடைந்தமையால் மேலும் பல கிராமங்களுக்கு சிவப்பு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

திஹகொட, மாத்தறை, மாலிம்பட ஆகிய பிரதேசங்களில் உள்ள பல கிராமங்களுக்கு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளதாக நீர்ப்பாசன திணைக்களத்தின் நீரியல் பிரிவு பணிப்பாளர் எஸ்.பி.சி. சுகீஸ்வர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அத்தனகலு ஓயா, கிங் கங்கை, களனி மற்றும் களு கங்கைகள் தொடர்ந்தும் அபாய மட்டத்தில் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தனகலு ஓயா பெருக்கெடுத்ததால் கம்பஹா நகரம் தொடர்ந்தும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

கம்பஹா வைத்தியசாலை வெள்ளத்தில் மூழ்கும் அபாயம் காணப்படுவதால் வைத்தியசாலையில் தங்கியுள்ள நோயாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் அவசர அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம்


பலத்த மழை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட அவசர அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான அவசர அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்க ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தீர்மானித்தனர்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கும் முற்றாக சேதமடைந்த வீடுகளை அரச செலவில் பாதுகாப்பு படையினரின் உதவியுடன் புனரமைப்பதற்கும் உரிய பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.




# மின்சாரக் கட்டண முன்மொழிவு இந்த வாரம் ஆணைக்குழுவிற்கு

2024 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டிற்கான மின்சாரக் கட்டண முன்மொழிவு, பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு இந்த வாரம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தமது எக்ஸ் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும், காலாண்டிற்கு ஒரு தடவை மின்சாரக் கட்டணத்தில் திருத்தம் செய்ய கடந்த ஆண்டு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய, எதிர்வரும் ஜூலை மாதத்தில் திருத்தம் செய்யப்படவுள்ள மின்சாரக் கட்டண திருத்த முன்மொழிவு, இந்த வாரத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டுள்ளார்.

# லாப்ஸ் சமையல் எரிவாயு விலை நேற்று நள்ளிரவு முதல் குறைப்பு




நேற்று நள்ளிரவு முதல் லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

12.5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 160 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக லாப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

5 கிலோகிராம் சிலிண்டரின் விலை 65 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 12.5 கிலோகிராம் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை 150 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது என லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது. 5 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 60 ரூபாவினாலும், 2.3 கிலோகிராம் சமையல் எரிவாயுவின் விலை 28 ரூபாவினாலும் குறைக்கப்பட்டுள்ளது.



# கொழும்பில் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து ஆராயத் திட்டம்

கொழும்பு நகரில் வெள்ளம் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்களை ஆராய நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து அறிக்கையை பெற அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கான பொறுப்பு கொழும்பு மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மதுபானசாலைகளை மூடுமாறு அறிவுறுத்தல்

எதிர்வரும் பொசன் வாரத்தை முன்னிட்டு நாட்டின் சில பகுதிகளில் மதுபானசாலைகளை மூடுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, மத்திய நுவரகம் பிரதேச சபைக்குற்பட்ட பகுதிகள், கிழக்கு நுவரகம் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் மற்றும் மிஹிந்தலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் இவ்வாறு மதுபானசாலைகளை மூடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.




# சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் மீண்டும் மீறப்பட்டால் நாடு பின்னோக்கிச் செல்லும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு









"சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் மீறப்படுமானால் நாடு பின்னோக்கிச் செல்லும். எனவே அந்த உடன்படிக்கைகள் அனைத்தையும் அமுல்படுத்த, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்திற்கு ஆதரவளிக்க வேண்டியது அனைவரினதும் பொறுப்பு."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான 'உறுமய' முழுமையான காணி உறுதிப் பத்திரம் வழங்கல் மற்றும் அரிசி மானியம் வழங்கும் நிகழ்வு கரவனெல்ல ஸ்ரீ விசுத்தாராமவில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'உறுமய' நிரந்த காணி உறுதிப் பத்திரம் வழங்கும் தேசிய வேலைத் திட்டத்தின் ஒரு கட்டமாக கேகாலை மாவட்டத்தில் 350 காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கினார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு 20 கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டமாக 800 குடும்பங்களுக்கு தலா 10 கிலோ அரிசி வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

"உறுமய காணி உறுதிப் பத்திரத்தின் ஊடாக உங்கள் உரிமை உங்களுக்கு வழங்கப்படுவதாக நான் கருதுகிறேன். இந்த உரிமையை மக்களுக்கு வழங்க முந்தைய அனைத்து அரசுகளும் தவறிவிட்டன. அதற்கான முறையான கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஆனால் வெள்ளையர் எந்த சட்டத்தின் மூலம் நிலத்தை கையகப்படுத்தினார்களோ அந்தச் சட்டத்தின்படியே நாட்டு மக்களுக்கு நில உரிமைகளை வழங்கியுள்ளோம். இந்த நிலத்தைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பாகும்.

இந்த அரசாங்கம் சாதாரண அரசாங்கம் அல்ல. இது ஒரு கட்சியால் உருவாக்கப்பட்ட அரசாங்கமுமல்ல. இந்த அரசாங்கத்தில் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் உள்ளனர். ஆனால் அரசாங்கம் என்ற வகையில் இன்று நாம் ஒரு பெரிய பொறுப்பை ஏற்றுள்

தொடர்ச்சி ▼




# சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்கள் மீண்டும் மீறப்பட்டால் நாடு பின்னோக்கிச் செல்லும்









தொடர்ச்சி ▲

ளோம். அந்தப் பொறுப்பை ஏற்க மறுத்த குழுதான் எதிர்க்கட்சி. அது தான் எமக்கிடையிலுள்ள வித்தியாசம். அன்று நாட்டில் நிலவிய நிலைமையை நான் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இன்று இந்த நாட்டை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு வந்துள்ளோம். அந்த நெருக்கடியில் இருந்து மீண்டுவர 4-5 வருடங்கள் பிடிக்கும் என்று பலர் நினைத்தனர். ஆனால் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் இரண்டே ஆண்டுகளில் மீண்டு வர முடிந்தது.

இன்று, நாட்டில் சுற்றுலாத் துறை முன்னேற்றமடைந்துள்ளது. தற்போது நாட்டிலுள்ள வறுமையை குறைப்பதில் கவனம் செலுத்தியுள்ளோம். அதற்காக விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். கிராமப் பொருளாதாரத்தை உயர்த்தாமல் வறுமையை ஒழிக்க முடியாது.

மேலும், நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான இலக்குகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தங்களை எட்டியுள்ளோம். 2027 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 வீதமாக உயர வேண்டும். எதிர்காலத்தில் இது 8 சதவீதமாக அதிகரிக்கப்பட வேண்டும். 2025இற்குள் வேலையின்மை 5 வீதமாக குறைக்கப்பட வேண்டும். மேலும், வறுமையை 2027 இல் 25 வாதம் -15 விதமாகவும், 2035 இற்குள் 10 விதமாகவும் குறைக்க இலக்கு வைத்துள்ளோம்.

இந்தப் பணியை முன்னெடுப்பதாக நாம் அறிவித்த நிலையில், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் எங்களுக்கு முழு ஆதரவை அளித்துள்ளது. மேலும், நாங்கள் பெற்ற வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதை எளிதுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த செயற்பாட்டை மீறினால் நாடென்ற வகையில் பின்னோக்கி சென்று விடுவோம். சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை இழக்க நேரிடும். ஏனெனில் இலங்கை பல சந்தர்ப்பங்களில் வாக்குறுதிகளை அளித்து அவற்றை மீறியுள்ளது.

எனவே, இந்த ஒப்பந்தங்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டு, பொருளாதார பரிமாற்றச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த வரைவு நமது பொருளாதார இலக்குகள் மற்றும் ஒப்பந்தங்களை சட்டப்பூர்வமாக்குகிறது. எமக்கு கடன் வழங்கிய நாடுகள் இலங்கை இந்தத் திட்டத்தைத் தொடரும் என்பதில் திருப்தியடைந்துள்ளமையால் அவர்களின் ஆதரவை நாங்கள் பெறுகிறோம்.

எனவே இதை எங்களால் மாற்ற முடியாது. தற்போது இந்த பேச்சுவார்த்தை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. எனவே, அரசியல் மேடைகளில் வீண் பேச்சு பேசுவதில் அர்த்தமில்லை. நாம் எது செய்வதாக இருந்தாலும் இந்தக் கட்டமைப்பிற்குள் செய்ய வேண்டும். எனவே, பொறுப்புகளை ஏற்காததால் தான் நீங்கள் எதிர்க்கட்சிக்கு சென்றீர்கள் என்பதை எதிர்க்கட்சிகளுக்கு கூற விரும்புறேன். சம்பிரதாய அரசியலில் ஈடுபட்டதாலே அந்த நிலை வந்தது. சவால்களை அச்சமின்றி ஏற்றுக்கொண்டதால்தான் இன்று ஆட்சியில் இருக்கிறோம். இப்போது நாங்கள் பெறுபேறுகளைக் காட்டியுள்ளோம். ஒரே பாதையில் ஒன்றாக பயணிக்க முன்வருமாறு அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன்.” – என்றார்.

# கிளி. இரணைமடு நீர்பாசனத்திற்கு நிலையான பொறிமுறை வேண்டும்

## கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் தெரிவிப்பு




இரணைமடு நீர்பாசனத்திற்கு நிலையான பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தெரிவித்துள்ளார்.

வெளிகண்டல் பகுதியில் நெற்செய்கையில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டினை தீர்க்கும் விசேட கலந்துரையாடலில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்–

“கிளிநொச்சி மாவட்டத்திற்கு இரணைமடுக் குளம் வரப்பிரசாதமானது. இந்த குளத்திலிருந்து மேற்கொள்ளப்படும் விவசாயம் என்பது மாவட்டத்தில் முக்கிய இடமாக உள்ளது.

ஆனால், அந்தக் குளத்தின் கீழ் சிறுபோக செய்கை மேற்கொள்வதற்கான நிரந்தர பொறிமுறை இல்லை. வருடா வருடம் ஒவ்வொரு பிரச்சினை எழுகின்றது.

இந்த நீர்பாசன திட்டத்திற்கான நிரந்தர பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். நீர்பாசன திணைக்களம் குறிப்பிடுவது போன்று, வான் கதவுகள் திறக்கப்படும்போது அழிவுகளை சந்திப்பவர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ன மன நிலை எல்லாருக்கும் உள்ளது.

இரணைமடுக் குளத்தின் நீர் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் சென்றடையாது, பரந்துபட்ட மக்களிற்கும் கிடைக்கும் வகையில் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும்.

வருடம் தோறும் புதிய புதிய பிரச்சினைகள் எழுகின்றன. இதற்கு நீர்பாசன திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையுடன் விவசாயிகளையும் உள்ளடக்கி நிரந்தர பொறிமுறையை உருவாக்க வேண்டும்.

இந்த சிறுபோகத்தின் பின்னர் இந்த பிரச்சினைக்கு முறையான பொறிமுறை ஊடாக தீர்மானம் எடுக்க வேண்டும். சில விவசாயிகள் என்னை சந்திக்கும் போது, எமக்கு தண்ணி தந்தால் போதும். சில தலைவர்கள் தமக்கு ஏற்றாப்போல் செயற்படுகின்றனர் என கூறுகின்றனர்.

விவசாய அமைப்புக்களின் தலைவர்கள் தமக்கு ஏற்றாப்போல் செயற்படாமல் உறுப்பினர்களின் விருப்பங்களை முன்னிலைப்படுத்தி செயற்பட வேண்டும்.

முதலில் விவசாயிகள் பிரச்சினையை பெரிதாக்கிக் கொண்டே செல்லாமல், ஒற்றுமையாக இருந்து முரண்பாடுகள் இல்லாமல் தீர்க்க வேண்டும். இதில் ஒவ்வொருவரும் தமது விருப்பத்திற்கு அமைவாக செயற்பட முடியாது. இரணைமடு குளத்தின் கீழான விவசாயத்துக்கு நிரந்தர தீர்வு ஒன்றை வரைய வேண்டும்.” – என்றார்.

# சீரற்ற காலநிலையால் 26 பேர் உயிரிழப்பு; பிரமித்த பண்டார தென்னக்கோன் தகவல்

”சீரற்ற காலநிலையால் 26 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு லட்சத்து 30 ஆயிரத்து 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், மீள் புனரமைப்பு பணிகளை முன்னெடுக்கவும் ஜனாதிபதி நிதி ஒதுக்கியுள்ளார்.”

– இவ்வாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் உரையாற்றுகையில் –



”நாட்டில் கடந்த தினங்களில் நிலவிய சீரற்ற காலநிலையால் இதுவரை (நேற்று திங்கட்கிழமை) 23 மாவட்டங்களில் உள்ள 33 ஆயிரத்து 622 குடும்பங்களை சேர்ந்த 130,021 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட திடீர் விபத்துக்களினால் 26 பேர் உயிரிழந்துள்ளமையுடன், 41 பேர் காயமடைந்துள்ளனர்.

மண்சரிவு மற்றும் வெள்ள அபாயத்தை கருத்திற் கொண்டு 116 தற்காலிக பாதுகாப்பு மத்திய முகாம்களில் 2,369 குடும்பங்களைச் சேர்ந்த 9248 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான வசதிகள் பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனர்த்தங்களில் இருந்து மக்களை பாதுகாப்பதற்கு முப்படையினர் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர். இயற்கை அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை தொடர்பில் கடந்த வாரம் திங்கட்கிழமை பாதுகாப்பு அமைச்சின் ஊடாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.

அனர்த்தங்கள் தொடர்பில் அறியத் தருமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் 117 என்ற விசேட தொலைபேசி இலக்கத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. பிரதேச செயலக பிரிவுகள் முன்வைக்கும் யோசனைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எதற்கும் எதிர்ப்பு தெரிவிப்பது தற்போது வழமையாகி விட்டது. மாவட்டங்களில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையின் போது மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு போதுமான நிவாரணம் வழங்க ஜனாதிபதி நிதி ஒதுக்கியுள்ளார்.”– என்றார்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.06.2024




கடின முயற்சிகளின் மூலம் வெற்றி கிடைக்கும். உங்கள் செயல்களில் வளர்ச்சி வெற விரும்பினால் மனதை ஒரு முகப்படுத்தி செயலாற்ற வேண்டும்.

மனச்சோர்வு ஏற்படும் சூழ்நிலைகள் உருவாகலாம். உங்கள் கீழ் பணிபுரிவோரிடம் நல்ல முறையில் பழகுங்கள்.

உறவில் வரும் பிரச்சினைகளை நல்ல முறையில் கையாள அமைதியாக இருந்து ஆசுவாசப்படுத்திக் கொள்ளுங்கள். உணர்ச்சி வசப்படுதலை தடுத்தால் நீங்கள் நல்ல முறையில் உணர்வீர்கள்.

வரவும் செலவும் இணைந்தே காணப்படும். ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் கவலையை அளிக்கும்.

முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறுகளால் அவதிப்பட நேரிடலாம்.




உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல் திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

தொழிலில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் நேர்மை உங்களுக்கு வெகுமதியை பெற்றுத் தரும்.

தொடர்பாடலில் ஏற்படும் குறைபாடுகள் உறவில் நல்லிணக்கத்தை தடுக்கும். உறவை வலுப்படுத்த குடும்பத்துடன் அதிக நேரத்தை செலவிடுங்கள்.

நிதியைப் பொறுத்தவரை நல்ல நேரத்துக்காக காத்திருக்க வேண்டும். செலவு செய்வதைவிட சேமிப்பது நல்லது.

உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். பல்வலி, கண்கள் மற்றும் கால்களில் வலி ஏற்படலாம்.




நீங்கள்செய்யும் செயல்களின் விளைவுகள் உங்களுக்கு அனுகூலமாக இருக்க நீங்கள் விரைந்து செயலாற்ற வேண்டும். உங்களிடம் இருக்கும் புத்திசாலித்தனத்தின் மூலம் எதை செய்யலாம் எதை செய்யக் கூடாது என்று உணர முடியும்.

ஒப்புக் கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதற்றம் காணப்படும். சக பணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

குடும்பப் பிரச்சினை ஒன்றின் காரணமாய் உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். நட்பான அணுகுமுறையும் விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்வதும் நன்மை தரும்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும்.




உங்கள் வாய்ப்புகளை வளர்த்துக் கொள்ள உகந்த நாள். இன்று பயணங்கள் அதிகம் காணப்படும். அது உங்களுக்கு பயனளிக்கும்.

பணிச் சூழல் இன்று சிறப்பாக காணப்படும். நீங்கள் ஆற்றும் பணிக்காக நற்பெயரை எடுப்பீர்கள்.

குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். ஒவ்வொரு மணித்துளிகளையும் அனுபவித்து மகிழ்வீர்கள்.

இன்று பணத்தை சேமிக்கவும் நிதிநிலையை மேம்படுத்தவும் உகந்த நாள். பணியின் மூலம் உங்களுக்கு நன்மைகள் கிடைக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நல்ல தேக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் காணப்படும். சிறந்த முறையில் திட்டமிட அமைதியாக செயலாற்றுங்கள்.

மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். சகபணியாளர்கள் உங்களை பாராட்டுவார்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். பெரியவர்களுடனான உறவில் நல்ல ஒத்துழைப்பு பராமரிக்கப்படும்.

நிதிநிலையில் முன்னேற்றம் காணப்படும். உங்கள் பணவரவை மேம்படுத்துவதற்கான நல்ல வாய்ப்புகள் கிடைக்கும்.

இன்று மகிழ்ச்சியாக இருப்பதன் காரணமாக ஆரோக்கியம் சிறந்த முறையில் காணப்படும்.




இசை கேட்பதும் திரைப்படங்களைப் பார்ப்பதும் உங்களை நிதானப்படுத்தும். உங்கள் செயல்களில் நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.

பணி வளர்ச்சி மந்தமாக இருக்கும். மேலதிகாரியிடம் உங்கள் மதிப்பை நிரூபிக்க கடினமாக உழைக்க வேண்டும். இன்று ஓய்வின்றி வேலையில் மும்மரமாக இருப்பீர்கள்.

பெரியவர்களுடன் உறவாடும் போது கவனமாக இருக்க வேண்டும். குடும்ப அங்கத்தினர்களிடம் நட்பாக இருக்க வேண்டும்.

நிதிநிலையில் முன்னேற்றம் குறைந்து காணப்படும். இன்று பணம் செலவு செய்வதை தடுப்பது நல்லது.

சூடு சம்பந்தமான பிரச்சினைகளில் முன்னெச்சரிக்கையாக இருக்கவும். தலைவலி ஏற்படலாம்.




உங்களுக்கான வளர்ச்சியில் நீங்கள் கவனம் செலுத்துவீர்கள். மற்றவர்களின் ஆதரவை நாடுவதை விட உங்கள் செயல்திறன் மற்றும் திறமையை நம்பி செயல்பட வேண்டும்.

வேலையில் பதற்றம் காணப்படும். உங்கள் கடமைகளை சரியான முறையில் செய்வதற்கு மிகவும் கவனமாக பணிகளைக் கையாள வேண்டும்.

குடும்ப உறவில் ஒற்றுமை குறைந்து காணப்படும். சிறிய அளவில் அனுசரித்துப் போவதன் மூலம் சம நிலையை பராமரிக்கலாம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். முக்கியமான முடிவுகளை இன்று எடுக்காதீர்கள்.

நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமெனில் பதட்டத்தை கைவிடுங்கள். தியானம் மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக உணர்வீர்கள்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். முக்கியமான முடிவுகளை எடுக்க இன்றைய தினத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

ஒப்புக்கொண்ட பணிகளை முடித்துக் கொடுக்க வேண்டும் என்ற பதட்டம் காணப்படும். சகபணியாளர்களிடம் நல்லுறவைப் பேணுவது பயனளிக்கும்.

உறவுமுறையைப் பொறுத்தவரை செயல்பாடுகள் காணப்படாது. பரஸ்பர நல்லிணக்கத்தை பராமரிக்க அனுசரித்துப் போவது மிகவும் முக்கியம்.

நிதிநிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். நிதிநிலையைப் பாதுகாக்க திட்டமிடல் அவசியம்.

மனஅழுத்தமும் பதற்றமும் செரிமானக் கோளாறுகளை ஏற்படுத்தும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.06.2024




உறவுகளில் சிக்கல் வராமல் இருப்பதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும். புதிய உறவுகள் ஏற்பட சாத்தியம் உள்ளது. மிகுந்த பொறுமை அவசியம்.

சிறந்த நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். பணியை எளிதாக முடிப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

பொதுவாக நல்ல உறவுமுறை காணப்படுகின்றது. நீங்கள் உங்கள் குழந்தைகளின் வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நிதி வளர்ச்சி நன்கு காணப்படும். ஆன்மீக காரியங்களுக்காக இன்று பணம் செலவு செய்வீர்கள்.

இன்று திடமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.




வெளியிடங்களுக்குச் செல்வது சிறப்பான உணர்வைத் தரும். உங்கள் செயல்களில் உணர்ச்சி பூர்வமாக இருப்பதைவிட யதார்த்தமாக இருப்பது அவசியம். இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

மனஅழுத்தம் காரணமாக கவனக் குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

உறவில் நட்பான அணுகுமுறையைக் கையாள்வது உங்களுக்கு நல்லது.

நீங்கள் எதிர்பார்த்த அளவுக்கு நிதி வளர்ச்சி இருக்காது. ஆரோக்கியம் சம்பந்தமான செலவுகள் காணப்படுகின்றது.

பதற்றமும் பாதுகாப்பற்ற உணர்வும் உங்கள் ஆரோக்கியத்தை கெடுக்கும்.




ஒரு துடிப்பான நாள் உங்கள் முன் இருக்கிறது. உங்கள் சுய வளர்ச்சிக்காக எடுக்கும் அனைத்து முயற்சிகளும் உங்களுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும்.

சேவை சார்ந்த ஈடுபாடு காரணமாக பணி மற்றும் பணியிடச் சூழல் உங்களுக்கு சாதகமாக காணப்படும். பணியில் தவறுகள் நேராவண்ணம் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சாதகமான உறவிற்கு இந்த நாள் ஏற்றதாக இல்லை. உங்கள் நேர்மறையான அணுகுமுறை குறிப்பிடத்தக்க மாறுபாடுகளை கொண்டு வரும்.

செலவினங்கள் அதிகமாகக் காணப்படும். தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும். எதிர்காலத்திற்காக சிறிது சேமிக்கவும்.

இன்று பதற்றம் காணப்படும்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியை அனுபவிக்கும் நாள். உறுதியுடன் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

வேலையில் அதிக பொறுப்புகளை சுமக்க வேண்டியிருக்கும். உங்கள் வேலையில் இன்னும் கூடுதலாக ஈடுபட முயலுங்கள். உங்கள் ஆர்வத்தை அது மேம்படுத்தும்.

உறவில் நெறி முறைகளைப் பின்பற்றுவீர்கள். உடன்பிறந்தோர்கள் ஆதரவாக இருப்பார்கள்.

இன்று நிதிநிலைமை நன்றாக உள்ளது. பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று நிலையான ஆரோக்கியம் காணப்படும். உங்கள் தைரியம் உங்களை நலமாக வைத்திருக்கும்.

